**ARTICLE 27 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00026**
Vol. 20, No. 01 (October 2026) – Part II | pp. 1–6
Received: 30 September 2026 • Accepted: 1 October 2026

# நாஞ்சில் நாடன் படைப்புகளில் சமூகச் சிந்தனைகள்

**மாரித்துரை ம[1,*], முனைவர் . பன்னீர்செல்வம் க[2]**

[1]முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை பதிவு எண் : B1/TAM24PJULY0910/2024 ஈரோடு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ரங்கம்பாளையம்., India

[2]இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை ஈரோடு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ரங்கம்பாளையம், பாரதியார் பல்கலைக்கழகம் கோயம்புத்தூர் இணைவுப்பெற்றது., India

***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** மாரித்துரை ம — sangaimaridurai62@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

சமுதாயத்தில் நிகழும் நிகழ்வுகளைக் கண்டறியும் நுட்பமும் அதை அலசி ஆராயும் ஆற்றலும் படைப்பாளர்களுக்கு அவசியமானது என்பர். சமுதாய உணர்வுகள் இன்றி எந்த ஒரு படைப்பாளளும் தன்னைப் படைப்பாளனாக வெளிப்படுத்திக்கொள்ள முடியாது. ஒரு படைப்பாளன் சமுதாயத்தில் நடக்கும் பிரச்சனைகள் மற்றும் சமூக மாற்றங்களை தன் உள்ளத்தில் பதிவு செய்து அதனை சிறந்த படைப்பாக வெளிப்படுத்துகின்றான். இதனை இன்றைய தற்காலப் படைப்பாளர்கள் சிறப்புடன் செய்துவருகின்றனர். அந்தவகையில் நாஞ்சில் நாடன் தன்னுடைய படைப்புகளில் சமூகத்திற்குத் தேவையான மாற்றங்கள் என்னென்ன என்பதைத் தெளிவாகப் வெளிக்காட்டியுள்ளார். தன்னுடைய படைப்புகளில் காணப்படும் சமூகம் மற்றும் அச்சமூகத்தில் காணலாகும் மக்கள் வாழ்வியல் முறைகள், அவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள்; போன்றவற்றைத் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார. அதனை விரிவாகவும், விளக்கமாகவும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**Keywords / திறவுச் சொற்கள்:** சமூக மாற்றம்; வாழ்வியல் முறை; சிக்கல்கள்; தீர்வுகள்

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** ம, மா., & க, மு. . ப. (2026). நாஞ்சில் நாடன் படைப்புகளில் சமூகச் சிந்தனைகள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 1, –.

## முன்னுரை

இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கையில் இருந்து உருவானவையாகும். ஒவ்வொரு காலத்திலும் மக்கள் எவ்வாறெல்லாம் வாழ்ந்தார்கள் என்பதை இலக்கியங்கள் வெளிக் காட்டுவனவாக இருக்கின்றன. தமிழ் மொழியில் எண்ணற்ற இலக்கியங்கள் உருவாகி மக்களின் வாழ்க்கை முறைகளையும், பண்பாடுகளையும் பதிவாக்கியுள்ளது. காலந்தோறும் தமிழில் பல புதிய இலக்கிய வடிவங்கள் தோன்றின. அவ்வகையில் தோன்றி வளர்ந்த இலக்கிய வடிவங்களில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பிடித்தது சிறுகதை வடிவமாகும்.

எழுத்தின் ஆற்றலும் கூர்மையும் அணியாகக் கொண்டு படைக்கப் பெற்ற சிறுகதைகள் மக்களின் வாழ்க்கையையும், வாழ்வியல் சார்ந்த சூழல் மாற்றத்தையும், மறுமலர்ச்சியையும் வெளிப்படுத்தும் ஊடகமாகச் செயல்பட்டன. அந்த வகையில் நாஞ்சில் நாடனும், நாஞ்சில் நாட்டு வட்டார மொழியில், அப்பகுதியில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கையையும்,

பண்பாட்டையும். அவர்கள் எதிர்கொள்ளும் சிக்கல்களையும் மையமாகக் கொண்டு பல படைப்புகளைப் படைத்துள்ளார். நாஞ்சில் நாடன் படைப்புகளின்வழி வெளிப்படும் சமூகச்சிந்தனைகள் குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## நாஞ்சில் நாடன் படைப்புகளில் வறுமை

நாஞ்சில் நாடன் தம் படைப்புகளில் சமூகத்தில் நிகழும் சீர்கேடுகளான வறுமை, சாதியப் பாகுபாடுகள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் ஆகியவற்றை அழுத்தமாகப் பதிவு செய்து வருகின்றார்.

வறுமை என்பது மிகவும் கொடுமை நிறைந்த ஒன்றாகும். அப்படிப்பட்ட வறுமையில் உழன்றிருக்கின்ற மக்களைப் பற்றி எழுத்தாளர்கள் பல்வேறு வடிவங்களில் குறிப்பிடுகின்றனர். வறுமையின் கொடுமையைப் பற்றி ஔவையார் குறிப்பிடுகிறார். இதனை,

“கொடியது கேட்கின் நெடிய வெல் வேலோய்
கொடிது கொடிது வறுமை கொடிது
அதனினும் கொடிது இளமையில் வறுமை”1

என்ற பாடலில் வறுமை என்பது கொடிய நோய் என்றும், அவற்றை விட இளமையில் தோன்றும் வறுமையானது மிகவும் கொடுமையானது என்றும் குறிப்பிடுகிறார்.

இiமைப்பருவம் என்பது கல்வி பயில்வதற்கும், விளையாடுவதற்குரிய தாகும். ஆனால் அவ்வாறில்லாமல் இளமையில் தொழிலாளார்களாக மாறி வறுமையில் உழன்று இரப்பவர்களாக இருப்பதை தம் சிறுகதைகளின் வாயிலாகப் பதிவுசெய்கிறார்; நாஞ்சில் நாடன்.

'உப்பு” என்னும் கதையில் சொக்கன் எனும் சிறுவன் தனது பாட்டியுடன் வளர்கிறான். அக்கிழவி நிலத்தில் உழைத்துத் தன் பேரனைக் காப்பாற்றி வருகிறாள். ஒருநாள் மழை வெள்ளத்தில் சிக்கி மீள முடியாமல் இறந்து விடுகிறாள். அதன் பின்னர் ஆதரவற்று சிறுவன் சொக்கன் வறுமையில் உழன்று வாடுகிறான் என்பதை இளமையில் வறுமையைப் பற்றி உப்பு என்னும் படைப்பில் எடுத்துக்காட்டுகிறார்.

“ஆசையெனும் நாய்கள்” என்னும் சிறுகதையில் ஏழ்மை குடும்பத்தைச் சேர்ந்த மூக்கனின் வறுமைத் துயரைப் படம் பிடித்துக் காட்டியுள்ள நாஞ்சில் நாடன். பொருளாதாரத்தில் உயர்ந்தவர்களின் வீட்டுச் சிறுவர்கள் திருவிழாக் காலங்களில் கடைத்தெருவில் பண்டங்களை வாங்கி உண்கின்றார்கள். அச்சமயத்தில் மூக்கன் எவ்வழியுமின்றி நின்றிருந்த நிலையைப் பற்றிக் குறிப்பிடுகையில், **“எல்லோரும் பத்துப் பைசா கொடுத்து கலர் குடித்தபோது மூக்கன் யோகி போலத் திரும்பிப் பார்த்துக் கொண்டு நின்றான்”**2 என்கிறார். இவ்வாறு மூக்கன் இளம் வயதிலேயே வறுமைக்குள்ளாகிய இழிநிலையைப் பற்றி நாஞ்சில் நாடன் பதிகின்றார்.

'ராஜாக்களும் சீட்டுக் கம்பெனிக்காரர்களும்” என்னும் சிறுகதையில் வறுமையின் இறுதி நிலை பிச்சையெடுக்கும் நிலைக்குக் கொண்டு செல்லும் என்பதைப் பற்றி விவரிக்கின்றார். பெயர் சுட்டப்பெறாத மாந்தர் ஒருவர் பேருந்திற்காகக் காத்திருந்து பின் பேருந்தில் ஏறி ஓர் இருக்கையில் அமர்ந்து கொள்கிறார். பல்வேறு பிச்சைக்காரர்கள் பிச்சை எடுக்க

வரிசையில் வர இறுதியாக ஒரு சிறுவனும் வருகிறான். அவனுக்குப் பத்து வயதிருக்கும். அச்சிறுவன் அழுக்காகிப் போன துண்டு ஒன்றை இடுப்பில் உடுத்தியிருந்தான். பிச்சையெடுக்கையில் அதிக உரிமையுடன் அனைவரையும் தொட்டு சிரித்து காசு கேட்பது அவன் வழக்கமாக இருக்கின்றது. காசு இல்லையென்றபோதும் வாடாது அடுத்தவரிடம் சென்று பிச்சை எடுக்கலாயினான். இறுதியாக அச்சிறுவன் இருக்கையில் அமர்ந்த நபரின் அருகே வந்து,

**“நீரு அஞ்சு பைசா தந்தேருண்ணா எதுத்த கடையிலே போயி என்னவாது வாங்கி திம்பேன்” என்றான். பதிலுக்கு அவர் “ஒரு ரூவா தந்தா என்ன செய்வே சொல்லு” என்றான். உடனே அச்சிறுவன் “சோறு தின்னு ரெண்டு நாளாச்சுல்லா தெனமும் தோசை இல்லனா இட்லிதான். ஒரு ரூவா தந்தேருண்ணா வவுறுபுள்ளா சோறு வாங்கி திம்பேன்”3** என்றான். ஆனால் அத்தகைய இளைய சமுதாயம் பசியிலும் எதிர்கால சமுதாயத்தை வறுமையிலும் உழன்று பிச்சையெடுக்கும் அளவுக்கு இழிவான நிலைக்குச் அவர்களைத் தள்ளியுள்ள நிலையை இச்சிறுகதையானது பதிவு செய்துள்ளதை அறியமுடிகின்றது.

## சாதிய பாகுபாடுகள்

சாதியை ஒழிக்க காலந்தோறும் பல்வேறு முயற்சிகள் பலராலும் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன. சாதியைக் களைய அரசும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் சமூகக் குழுக்களும் என யாவும் முனைந்தபோதும் எண்ணங்களும், சாதிய ஏற்றத்தாழ்வுகளும் சமூக வெளியில் பரவலாக இருந்த இன்று வரை முழுமையாக வேரறுக்க முடியவில்லை என்பதே உண்மையாகும். சாதிய கட்டமைப்பு தள்ளமுடியாத அளவுக்கு நுண்மையாக மறுபடியும் மறுகட்டமைப்பிற்கு உட்படுகிறது.

சாதி என்பது இனக்குழு வாழ்க்கையின் நீட்சியாகும். அவ்வாறு உருவாகிய சாதியில் உயர்வோ. தாழ்வோ பாராட்டுவது முறையற்றதாகும். சாதியத்தைப் பற்றி பியூலா மெர்சி குறிப்பிடுகையில், **“சாதியின் கொடுமையைச் சமுதாய அளவில் மட்டும் பார்க்காமல் தனிமனிதனின் வாழ்க்கை அளவில் நோக்கி ஓரளவும் வெற்றிக் கண்டவன் எழுத்தாளன் தான். சாதியைச் சமூகப் பிரச்சனையாகப் எதிர்கொள்ள மறுக்கும் மனிதன் அது தன் வாழ்வில் குறுக்கிடும்போது அதைப்பற்றி சிந்திக்கத் தொடங்குகிறான்”4** என்கிறார்.

அந்தவகையில் நாஞ்சில் நாடன் படைப்புகளில் சாதியம் தொடர்பான சிக்கல்களைக் கதைமாந்தர்களது பாத்திரப்படைப்பின் வழியே வெளிப் படுத்தியிருக்கிறார்.

“சில வைராக்கியங்கள்” என்னும் சிறுகதை எள்ளல் சுவையுடைய தாகவும், அதே சமயம் சாதியத்தைச் சாடுகின்ற கதையாகவும் உள்ளது. பரமசிவம் பிள்ளை சாதிசங்க மாநாட்டிற்குச் சென்று திரும்பும் போது, தன் நண்பரான சங்கரலிங்கம் பிள்ளையிடம் சாதிக்கு மறுப்பாகப் பேசுகின்றார். அதன் பின்னர் வீட்டிற்குச் செல்லும் பரமசிவம் பிள்ளை தன் மைத்துனர் தன் மகளுக்குக் கொண்டு வந்திருக்கும் வரன் பற்றி பேசுகையில், **“நல்லதரம் கொண்டாந்திருக்கேடே மருமகளுக்கு பரமசிவம் குரலில்**

Vol. 20, No. 01 (October 2026) – Part II • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

**கேலியிருந்தது காரணம் அந்த வரன் மருமக்கள் வழி**"5 எனவே, அவர் அந்த வரன் வேண்டாமென மறுத்துவிடுகிறார்.

சாதிக்கு எதிராகக் கருத்துகளை பேசிவரும் பரமசிவம்பிள்ளை, தன் மகள் திருமணம் என்ற உடனே சாதியைவிட மறுக்கிறார். தன் சாதியின் உட்பிரிவாய் வரும் சாதியையே அவரால் ஏற்க முடியவில்லை. ஊருக்கு ஒருமுகம் உள்ளுக்குள் ஒருமுகம் கொண்ட மனிதர்களைத் தோலுரிக்கும் விதமாக “சில வைராக்கியங்கள்' என்னும் படைப்பினைப் படைத்துள்ளார் நாஞ்சில் நாடன் என்பதை அறியமுடிகின்றது.

## இளையோரிடமும் சாதி

நாஞ்சில் நாடனின் 'நேர்விகிதம்” என்னும் சிறுகதையில் இளையவர்கள் எவ்வாறு சாதிய ஏற்றத்தாழ்வு நிலைக்கு உள்ளாகிறார்கள் என்பதை எடுத்துக்காட்டுகிறார். முருகப்பன் எட்டாம் வகுப்பு படிக்கும் மாணவன் கோடைவிடுமுறை சமயத்தில் தன் நண்பர்களுடன் சூனாப்பிள்ளை மாந்தோப்பில் மாங்காய் பறிக்கச் செல்கின்றனர். அச்சமயம் சூனாப்பிள்ளையிடம் மாட்டிக் கொள்கிறார்கள். பின்பு சூனாப்பிள்ளையானவர் மாட்டிக் கொண்ட சிறுவர்களின் சாதியைப் பற்றி வினவி, ஒவ்வொருவராக விடுவிக்கின்றார். அவர்களில் முருகப்பனை மட்டும் விடாது, அவனை பலவாறாக இழிந்துரைத்ததோடு, அடிக்கவும் செய்கின்றார் என்பதை நாஞ்சில் நாடன் வெளிப்படுத்துகையில், **“திருட்டு தேவடியாவுள்ள களவாங்கவா வந்தே? சாதிகெட்ட பயலுக்கு ரொம்ப தைரியம் தான்லே”**6 என்று சொல்லிக்கொண்டே கீழே கிடந்த சுள்ளியை எடுத்து நிறுத்தாது அடித்துக்கொண்டே இருந்தார். சூனாபிள்ளையைப் போன்ற சாதி வெறியர்களைத் தோலுரித்துக் காட்டும் விதமாக இச்சிறுகதையை நாஞ்சில் நாடன் படைத்துள்ளார்.

## பொருளாதார ஏற்றத்தாழ்வுகள்

ஒவ்வொரு மனிதனின் வாழ்க்கையின் அடிப்படையில் பொருள் அவசியமாகின்றது. பொருள் சேர்த்து வைத்திருக்கும் அளவின் அடிப்படையிலே இச்சமூகம் ஒருவரை மதிப்பீடு செய்கின்றது என்பதை “அம்பாரி மீது ஒரு ஆடு” என்னும் சிறுகதை விளக்குகின்றது.

ஒரு நாடக அரங்கில் செல்வந்தர்களுக்கென ஒதுக்கப்பட்ட கூலித் தொழிலாளி ஒருவன் அமர்வதால் ஏற்படும் அவல நிலையை இக்கதை குறிப்பிடுகிறது. சுவாமிநாதனிடம் டிரைவராக வேலைப் பார்ப்பவன் சின்னக்கண்ணு. தன்னால் செல்ல முடியாத டிராமாவிற்கான டிக்கெட்டை, தனது டிரைவர் சின்னக்கண்ணுவிடம் கொடுத்து அனுப்பி வைக்கின்றான் சுவாமிநாதன். சின்னக் கண்ணுவும் அரங்கத்தில் நுழைந்து தனக்கான இருக்கையில் அமர்கிறான். அவன் தோற்றத்தைக் கண்ட அரங்கத்தின் செயலாளர்,

“ஏம்பா இது உன்சீட்டா..

ஆமாங்க.....

எங்கே டிக்கெட்டைக் காட்டுப் பார்ப்போம்

ஒருவகை நடுக்கத்துடன் டிக்கெட்டை எடுத்துக் காட்டுகின்றான்.

இது உனக்கில்லப்பா சுவாமிநாதனுக்கு இல்ல கொடுத்திருக்கோம்..

Vol. 20, No. 01 (October 2026) – Part II • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

அவருதாங்க எனக்கு தந்தாரு
அவர்தான் கொடுத்தார்னா முதல் ரோவலே வந்து உட்கார்ந்திரதா?"7

என்கின்றான் அரங்கத்தின் செயலாளர். பின் எழுந்து நடந்த சின்னக்கண்ணு பின்னிருக்கையில் சென்று அமராது, தான் அடைந்த நிலையை எண்ணியவாறே வீட்டுக்குச் செல்கின்றான். இவ்வாறு சமுதாயத்தில் மதிப்பென்பது, பொருளின் அடிப்படையில்தான் தீர்மானிக்கப்படுகின்றது என்று இக்கதையில் வெளிப்படுத்துகின்றார் நாஞ்சில் நாடன். பொருளற்றவரின் தன்மையைப் பற்றி வள்ளுவர் குறிப்பிடுகையில்

“அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு"8

என்கின்றார். வாழ்க்கையில் பொருள் நிறைவாய் இல்லாதவர்களுக்கு. இவ்வுலகம் உரிமையுடையதாக இருக்காது என்பதை வள்ளுவனார் குறிப்பிடுகின்றார்.

“இருள்கள் நிழல்களல்ல” என்னும் படைப்பினில் முடித்திருத்தும் பண்டாரமும், மற்ற ஏழை மக்களும் திருமண வீட்டின் பந்தியில் அமர்ந்து உணவு உண்ண முடியாத அவலத்தைக் குறிப்பிட்டிருப்பார் நாஞ்சில் நாடன்.

இவ்வாறு பொருளாதார ஏற்றத்தாழ்வுகளால் சமூகத்தில் எல்லா மக்களும் ஒரே அளவில் மதிக்கப்படுவதில்லை. இந்த அவலம் மாற வேண்டும் என்ற நிலையில் இச்சிறுகதையானது அமைந்திருக்கும்.

## முடிவுரை

வட்டார எழுத்தாளராக அடையாளப்பட்டிருக்கும் நாஞ்சில்நாடனது படைப்புகள் முழுமையும் எண்ணற்ற சமுதாயச் சிந்தனைகள் பதிவாகியுள்ளன. அவ்வாறு அவரது சிறுகதைகளில் பதிவாகியுள்ள வறுமை நிலையை உழல்வதால் விளையும் இன்னல்களைப் பற்றியும், அவ்வறுமை நிலை எவ்வாறு இளம்தலைமுறையினர் வரையிலும் வேரூன்றி உள்ளது என்பது வரை நோக்கப்பட்டது.

மேலும் சாதியால் எவ்வாறு சமுதாயம் பிரிந்திருக்கின்றது என்பதையும், அவ்வாறு சாதியின் அடிப்படையில் நிகழும் வன்கொடுமைகள் குறித்தும் அவர்தம் சிறுகதைப் படைப்புகளில் காணப்படும் செய்திகளையும், மேலும் பொருளாதார அடிப்படையில் எவ்வாறு தனிமனிதன் மதிப்பிடப்படுகின்றான் என்பதையும், பொருளாதாரத்தில் நலிந்திருக்கும் மக்களின் வாழ்வியல் குறித்தும் இக்கட்டுரையின்வழி ஆராயமுடிகின்றது.

## அடிக்குறிப்புகள் (Notes)

1. ஔவையார்- தனிப்பாடல் திரட்டு.ப-6
2. நாஞ்சில்நாடன் சிறுகதைகள், ஆசையெனும் நாய்கள்.ப.110
3. நாஞ்சில்நாடன் சிறுகதைகள், ராஜாக்களும் சீட்டுக் கம்பெனிக்காரர்களும். பக்-192-93
4. இருபதில் சிறுகதைகள்.ப.64
5. நாஞ்சில்நாடன் சிறுகதைகள், சில வைராக்கியங்கள்.ப-34
6. நாஞ்சில்நாடன் சிறுகதைகள், நேர் விகிதம்.ப-73
7. நாஞ்சில்நாடன் சிறுகதைகள், அம்பாரி மீது ஒரு ஆடு.ப-97

Vol. 20, No. 01 (October 2026) – Part II • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

8. திருக்குறள் எண்.247

© 2026 மாரித்துரை ம, முனைவர் . பன்னீர்செல்வம் க. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..